(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 86.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2011, ஏப்பிறல் 27, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0456/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளினது கடைகள் யாவற்றையும் உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை அவர் அறிவாரா?

(ஆ) அவை எப்போது, ஏன் அகற்றப்பட்டன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது கடைகள் யாவும் பூரணமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) நடைபாதை வியாபரிகள் எவராயினும் தமது வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் எனின் அது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதா என்பைதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்பபட்டனவா என்பதையும்,

(iii) அவர்களுடைய பெயர்களையும் வழங்கப்பட்ட மாற்று இடங்களையும்,

(iv) கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இப்பிரச்சினை நிலவுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இது ஓர் அரசியல் பழிவாங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0715/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகநெகும இயந்திர உபகரணங்கள், நிர்மாணக் கம்பனியின் தவிசாளரை நியமித்த அதிகாரி யாரென்பதையும்,

(ii) குறித்த தவிசாளரின் வயது யாதென்பதையும்,

(iii) இவர் இதற்கு முன்னர் பணியாற்றிய இடம் மற்றும் பதவிகள் யாதென்பதையும்,

(iv) இவரின் தொழில் சார் அனுபவம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0800/ '10

3.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது இயங்கி வரும் தேசிய கல்வியயற் கல்லூரிகள் பதினேழில் கல்வியில் டிப்ளோமா கற்கை நெறிமற்றும் உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து, இதுவரை ஆசிரியர் நியமனம் பெறாத அனேகமான ஆசிரிய மாணவ/மாணவிகள் உள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டு திசெம்பரிலிருந்து இற்றை வரை, ஆசிரியர் நியமனம் பெறாதுள்ள குறித்த டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்த ஆசிரிய மாணவ/மாணவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான செயல் முறையொன்று தற்போது ஏறப்படுத்தப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iii) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நியமனங்கள் வழங்கவிருக்கும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் குறித்த நியமனங்கள் வழங்கப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(v) குறித்த நியமனங்களை வழங்குவதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(vii) குறித்த நிதி ஒதுக்கப்பட்ட செலவினத்தலைப்பு மற்றும் செயல் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0968/ '10

4.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெதுறு ஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

(ii) இத்திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படும் பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(iii) இத்திட்டத்தின் கீழ் நீர்மின்சக்தி நிலையமொன்று நிர்மாணிக்கப்படுமா என்பதையும்,

(iv) ஆமெனில், அதன் பிறப்பாக்க இயலளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யாப்பஹுவ தொகுதியில் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குளங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அக்குளங்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படுமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0988/ '10

5.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க ஊழியர்களுக்கு வீடு வழங்குவதற்காக "நில செவன" எனும் வீடமைப்புத் திட்டத்தை ராகம நகர்ப் பிரதேசத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) உத்தேச வீடமைப்பு திட்டம் மூலம் நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போது மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் இதுவரை நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள திகதி என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

1007/ '10

6.

கௌரவ அகில விராஜ் காரியசவம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க பாடசாலை முறைமையில் உள்ள பதில் அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) பதில் அதிபர்கள் உள்ள பாடசாலைகளில், அதிபர்களாக கடமையாற்றுவதற்கான தகைமைகளைக் கொண்ட கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) அதற்கு மேலதிகமாக, மேற்படி பாடசாலைகளில் அதிபர் பதவிகளை வகிப்பதற்கு தகைமையுள்ள அதிபர் தரங்களில் சித்தியடைந்துள்ள அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி அதிபர்கள் குறித பதவிகளுக்கு நியமனம் செய்யப்படாமைக்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டிலுள்ள இசுறு பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நவோதய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளுக்கு கடந்த 5 வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதித்தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பணியாள் தொகுதி, ஒவ்வொரு பதவிக்கும் அமைய தனித்தனியே யாதென்பதையும்,

(ii) அவ்வாறு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பாடசாலைகள் எவை என்பதையும்,

(iii) ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை எது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1026/ '10

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளாக கிடைத்த நிதித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வருடங்களில் போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்தனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0475/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் எப்போது நடைபெற்றது என்பதையும்,

(ii) ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. ஆகிய கட்சிகள் வெற்றி பெற்ற சபைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) உரிய காலத்திற்கு முன்னரே இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட சபைகளின் எண்ணிக்கையையும்,

(iv) அச் சபைகளின் பெயர்களையும்,

(v) இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட திகதிகள், மற்றும் அதற்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர பிதாக்கள் அகற்றப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, பதவி நீக்கப்பட்ட அல்லது விசாரணை தொடரப்படும் (ii)இல் குறிப்பிட்ட சபைகளின் பெயர்களையும்,

(ii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதிகளையும் அவற்றுக்கான காரணங்களையும்,

(iii) தற்போது அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0717/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள திர்வை வரியற்ற வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறான ஒவ்வொரு தீர்வை வரியற்ற வர்த்தக நிலையமும் வழங்கப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள நபர்களின் பெயர், முகவரிகள் தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) அவ்வாறான கடைத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை அல்லது நிரந்தரமாக ஒப்படைப்பதற்கு அரசாங்கம் பெற்றுக்கொண்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய கடைத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், அதனை ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்,

(iii) அதன் கீழ் நிர்மாணிக்க எதிர்பார்க்கும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0801/ '10

10.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் மிகை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாகைளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

(iii) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0969/ '10

11.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மொரகஹகந்த நீர்த்தேக்க கருத்திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படும் பிரதேசங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தம்புள்ளை ஊடாக மீ ஓயா மூலம் யாப்பஹுவ மற்றும் கல்கமுவ பிரதேசங்களுக்கு நீரைக்கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த தென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) யாப்பஹுவ மற்றும் கல்கமுவ பிரதேசங்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு வழிமுறையொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதனை அவர் குறிப்பிடுகிறாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1027/ '10

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இம்மாணவர் சந்ததிக்கு பாடசாலை நடைபெறும் அனைத்து நாட்களிலும் மதிய உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0476/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 10 வருடங்களில் சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் விலைகள் எப்போது எந்தளவில் அதிகரிக்கப்பட்டன என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) கிகரெட் மற்றும் மதுபானம் ஆகியன முன்னைய விலையிலிருந்து கூட்டப்பட்ட ஒவ்வொரு முறையும் அதன்மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தை வெவ்வேறாகவும்

அவர் அறியத்தருவாரா?

(ஆ) விலைகளை அதிகரிப்பதன் மூலும் சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் பாவனையை குறைக்கத் தூண்டுவதற்கு அரசாங்கம் ஆர்வங் கொண்டுள்ளதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்ட சகலனினதும் வரிகளை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0727/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் பொல்தவான கொரகதெனிய வீதி எந்த நிறுவனத்திற்கு உரித்தாகின்றது என்பதையும் ,

(ii) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக உரிய நிறுவனத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபர்கள் யாரென்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீட்டுக்கமைய தாரிட வேண்டிய தூரத்தின் அளவும் வீதியின் அகலமும் எவ்வளவென்பதையும்,

(iv) தற்போது தாரிடப்பட்டுள்ள தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) தாரிட்டு முடித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீதிக்கு தாரிடுதல் தரநியமங்களுக்கமைய நடைபெறவில்லை என்பதையும், தற்போது பெரும்பாலான இடங்கள் ஆழ்ந்துள்ளன என்பதையும், உரிய தூரத்திற்கு தாரிடப்படவில்லை என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனின், தரநியமங்களுக்கு இணங்கியொழுகாத வகையில் நிர்மாணிப்பை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் கல்விபயிலும் சந்ததியினரின் போஷாக்கு நிலைமை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மாணவர்கள் மத்தியில் போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் சதவீதம் யாதென்பதையும்,

(iii) பாடசாலை மாணவர்களின் போஷாக்கின்மை நிலைமையை இல்லாதொழிப் பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நடவடிக்கைகள் பாடசாலை மாணவர்களின் போஷாக்கின்மை நிலைமையை இல்லாதொழிப்பதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

கமத்தொழில் அமைச்சர்,— பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்தம்),— 1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

கௌரவ விக்டர் அந்தனீ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

கடல்கடந்த ஊழியார்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

பிரதேசிய சங்வர்தன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவுடனும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் மற்றும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011, மார்ச்சு மாதம் 09 ஆம் திகதிய 1696/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.07ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர்,— விலங்குச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குச் சட்டத்தின் 3, 3அ அ, 11, 26 மற்றும் 34 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 35 ஆம் பிரிவின் கீழ் கால்நடை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009, நவெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1629/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.04.05ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்— "1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935 )

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

14.

தொல்பொருட்களைப் பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

பஹலகம சிறீ சோமரத்தன நாஹிமி தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

அனுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி ஸ்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

இலங்கைப் பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.